உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 8 | துந்துபி௵ ஆடி, ஆவணிமீ 1922௵ ஜூலை, ஆகஸ்டுமீ | இதழ் 4-5 |
|---|---|---|



| உள்ளுறை | பக்கம். |
|---|---|
| சிவஞானபோதம் ... ... ... | 73 |
| சந்தியாவந்தனம் ... ... ... ... | 76 |
| சிரார்த்தம் ... ... ... ... | 80 |
| சித்தாந்தம் ... ... ... ... | 83 |
| பொற்கைப் பாண்டியன் ... ... ... | 90 |
| ஏகாலியச் சிவநேயர்களின் முறையீடு ... ... | 94 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Militray Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1922.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# சிவக்ஷேத்திராலய மகோற்சவ

## உண்மை விளக்கம்

இந்நூல் சிவவிளக்கம், க்ஷேத்திராலய விளக்கம், மகோற்சவ விளக்கம் என முப்பாகங்களை யுடையது. இதில் அநேக ஞானார்த்தங்களைப் பற்பல அரிய நூற் பிரமாணங்களோடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 8.

---

குசேலோபாக்கியானம் :—மூலமும் அரும்பதவுரையும் வசனமும் தமிழ் பயில விரும்புவோருக்கு இன்றியமையாத சிறந்த இலக்கியம். உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. விலை அணா 12.

---

சீவகாருண்ய ஒழுக்கம் :—இது ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளால் எழுதப்பட்டது. இதில் உயிர், உலகம் இவற்றைப் பற்றியும், உயிர்களிடத்து செலுத்தவேண்டிய கருணையைப்பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இது படிப்போர் மனங் கசிந்துருகுந் தன்மையி லெழுதப்பட்டுள்ளது. விலை அணா 4.

---

சித்தாந்தப் பிரகாசிகை. விலை அணா 2.

"நவசக்தி" ஆபீஸ்,
இராயப்பேட்டை, சென்னை.

---

# திருவூறல் ஆலய தரும பரிபாலன

## சபை.

இச்சபை தேவாரம் பெற்றிருப்பதும், தக்கோலம் என வழங்கப்படுவதுமாகிய திருவூறலில் ஸ்ரீமத் சொக்கலிங்க சுவாமிகளால் தாபிக்கப் பெற்றுள்ளது. இதில் தக்கோலத் தலவாசிகளும் பிறருமாகப் பலர் கூடி சிவபுராண படனமும் தேவார பாராயணமும் செய்கிறார்கள்.

இத்தலத்தில் தொன்று தொட்டுப் பாதாள கங்கை திருநந்திதேவர் திருவாயினிடமாக வெளிப்போந்து சிவபிரானை வலம் வருவதாகிய அற்புதம் இன்றும் காணப்படுகிறது. இத்தகைய அருமையான சிவதலத்தில் ஆலயம் தரிசிக்கச் செல்வோர் தலையில் இடிந்து விழக் கூடிய அவ்வளவு கிலமாயிருந்தும், இதைச் சீரணோத்தாரணம் செய்ய இதுகாறும் யாருக்கும் புண்ணியம் வாய்க்காமலிருப்பது அதிசயமே. சிற்சில ஆலயங்களுக்கே ஏராளமாகப் பணச் செலவு செய்து இடைவிடாமல் திருப்பணி நடத்தும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் இதை இதுகாறும் கவனியாதிருப்பது வருந்தத்தக்கதாம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் 8 | துந்துபிஸு ஆடி, ஆவணிமீ 1922ஸு ஜூலை, ஆகஸ்டுமீ | இதழ் 4-5 |
| --- | --- | --- |


## சிவகாமியம்மையார் வணக்கம்

(சேக்கிழார் நாயனுர் புராணம்)

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமயவிருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல் போற்றி.

---

## சிவஞானபோதம்

(பன்னிரண்டாஞ் சூத்திரம்—51-வது பக்கத்தொடர்ச்சி.)

### மூன்றும் அதிகரணம்

மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே.

(இ - ள்) சிவன் முத்தன் தனது மலமயக்கம் நீங்க முதல்வனிடத்தில் அன்பு மீதூரப்பெற்ற சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் முதல்வன் எனவே கண்டு வழிபட்டு வாழ்வான் (எ - று.)

இதில்—1 - வது தன்னுற் கூறப்படும் பொருள் :—சிவன் முத்தர் சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவே தேறி வழிபடுவர்.

2 - வது—ஐயப்பாடு—சிவன் முத்தர்க்கும் திருவேட வழிபாடும் சிவாலயவழிபாடும் வேண்டுமோ.

3 - வது—பிறர் கூறும் பக்கம்—சீவன் முத்தர்க்கு யாவும் சிவமாகத் தோன்றுதலால் திருவேடத்தையும் சிவாலயத்தையும் வேறு பிரித்து வழிபட வேண்டுவதின்று.

4 - வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—முதல்வன் எங்கணும் வியாபகமாய் நிற்பினும், இவ்விரண்டிடத்து மாத்திரமே தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றி எனைய விடங்களில் பாலில் நெய்போல் வெளிப்படாது நிற்றலாலும், காமக் கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசிகரித்து இன்பஞ் செய்யுமாறு போல, பத்தரது திருவேடமும் ஆலயமும் மெய்யுணர்வுடையாரைக் காக்ஷி மாத்திரத்தாலேயே வசிகரித்து இன்பஞ் செய்தலாலும் சீவன் முத்தர் இவ்விரண்டையும் சிவனெனவே கண்டு வழிபடுவர்.

5 - வது—இயைபு—உதாரண வேண்பா

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பா னிகழுந் ததிநெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி.

(இ - ள்) பதி=வாக்கு மனாதீதமாய் நின்ற பரம்பொருள்—தன் உணர வேண்டி=உலகத்தார் தன்னை யறியும்படி கருணை செய்து—தனது உருவைத் தான் கொடுத்து=தனது வேடமாகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன் அன்பர்க்குக் கொடுத்து (அவர்களிடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குதலாலும்)—தன் உணர=அவர் தம்மைச் சோகம் பாவனையால் உணரச் செய்தலாலும்—தன்னுள் இருத்தலால்=அவரை ஒரு குறியின் கண் நிறுத்தித் தனது வியாபகத்திற்குள்ளாக இருத்துதலாலும்—தன் உணரும் நேசத்தர் தம் பால் ததி நெய்போல் நிகழும்=(குறியிறந்து நின்று) தன்னை உள்ளவாறுணரும் அன்பாளராகிய அவரிடத்தில் தயிரிலுள்ள நெய்போல் விளங்கித் தோன்றும்—பாசத்தார்க்கு இன்று ஆம்=பாசக்கட்டு உடையார்க்கு (இவ்வியல்பில்லாமையால்) அவரிடத்தில் விளங்கித் தோன்றாது பாலில் உள்ள நெய்போல் விளங்காது நிற்கும். (எ - று)

தன் உருவைக் கொடுத்து, தன்னுணரச் செய்து, தன்னுளிருத்தலால் ததி நெய்போல் நிகழும் எனக் கூட்டி முடிக்க —

இன்று = விளங்காது. தன் உணர = தன்னை உணரச் செய்து. இதில் செய்து என்பது சொல்லெச்சம் - இருத்ததால் = இருத்துதலால்.

கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தி லங்கிவே
றுண்டல்போ னின்றங் குளதாமாற்—கண்டவுருத்
தானதுவா யன்றானன் றானதுவாய்த் தோன்றானே
தானதுவாய்க் காணுந் தவர்க்கு.

இவ்வெண்பா, முற்கூறிய இயல்புகளையுடைய சங்கமவேடத்தினிடத்து இறைவன் எக்காலத்தும் பிரகாசமாய் நிற்றலால் சீவன் முத்தர்கள் அவ்வேடத்தை வழிபடுகவென்றது பொருந்துமாயினும், மந்திர சாந்நித்திய முண்டானபோது இறைவன் விளங்கியும் அது இல்லாதபோது விளங்காமலும் இருக்கும் சிவலிங்கமாதி மூர்த்திகளையுடைய சிவாலயங்களையும் சீவன் முத்தர்கள் வழிபடல் வேண்டுமென்பது எங்ஙனம் பொருந்தும் என்னும் ஆசங்கையை நீக்குவதாகும்.

(இ - ள்) காட்டத்தில் அங்கி வேறு உண்டல்போல் = விறகில் உள்ள தீயானது கடைந்தபோது வேறாய் விளங்கும், (கடையாதபோது விளங்குவதன்று.) அதுபோல், = கண்ட உருத்தான் அது ஆய் அன்று ஆனன் = (உயிர்களுக்குப் புத்திமுத்தி யளித்தற் பொருட்டுக்) காணப்பட்ட தாவரத்தின் அருவுருவின்கண் கலப்பினால் அதுவே தானாய், அதுவன்றி வேறு பொருளுமாம் இயல்புடைய முதல்வன்—(காணார்க்கு) கண்டது ஒரு மந்திரத்தால் நின்று அங்கு உளதாம் = (அதுவே தானாய்க் காணமாட்டாதார்க்குத் தம்மால்) அறியப்பட்டதொரு மந்திர சாந்நித்தியம் (இல்லாதபோது அங்கே விளங்காது நின்று) உள்ளபோது விளங்கித் தோன்றும் பொருளாம்.—அதுதான் ஆய்க்காணுந்தவர்க்கு அது தான் ஆய்த்தோன்றானே = (அவ்வாறன்றி) அதுவே தானாய்க் காணப்பெறும் உண்மைத் தவம் உடையார்க்கு எப்போதும் அப்படியே விளங்கித் தோன்றமாட்டானே.

காணார்க்கு என்பது சொல்லெச்சம். உண்டல் = விளங்கித் தோன்றல்.

---

# சந்தியாவந்தனம்

## (ஞானசித்திப் பிரசுரம்)

சந்தியாவந்தனம் என்பது செவ்வையாகத் தியானித்து வழி படுதல் என்னும் பொருளுள்ளது.

சம்=செவ்வே. தியா=தியானித்தல். வந்தனம்=வழிபாடு.

இச்சந்தியாவந்தனம் சைவர், வைணவர், ஸ்மார்த்தர், என்னும் நால்வர்க்கும் பொது நோக்கில் ஒன்றுபோலிருப்பினும் சிறப்பு வகையில் வெவ்வேறாயிருக்கும். அவ்வவர் முத்திநிலை வெவ்வேறு வகைப்படுதலே அதற்குக் காரணமாம்.

சைவ சந்தியாவந்தனம் சிவாகமப்படி சிவதீக்ஷை பெற்றோ ரால் அனுட்டிக்கப்படுவது. அதன் கருத்தென்னவெனில் ஆசிரிய னாலே தனக்குக் கொடுக்கப்பட்ட சிவத்துவத்தை அநுபூதியிற் கொண்டு வருதலாம். இது முத்தியடைதற்கு உபாயமாயிருக்கும். அது எங்ஙனமெனில் ஒருவன் தன்னை எப்பொழுதும் சிவனாகவே பாவித்து வருகிறான். உண்மையில் அவன் சிவனன்று. ஆன்மா வாம். ஆன்மா சைதன்னியப் பொருள். எங்கும் வியாபக மானது. ஆயினும் ஆணவமல சம்பந்தத்தால் அறியாமையெய்தி அம்மலத்தின் குணமே தன் குணமாகக் கொண்டு ஒன்று மறியா திருந்தது. பின் அம்மலமேதுவாக மாயை கன்மங்களையும் அடைய லாயிற்று. மாயாகாரியமான சூக்குமசரீரத்தை யடைந்த பொழுது சீவன் எனப்படுகின்றது. ஆதலால் அச்சீவநிலை உபாதி யேயன்றி உண்மையன்று. அவ்வுபாதி நீங்க வேண்டின் உண்மை நிலையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆன்மா மலச்சேர்க்கை யோடிருக்கிறவரையில் உண்மை நிலை கைவரமாட்டாது. அதனால் மலம் ஒழிய வேண்டியது அவசியமாகிறது.

மல ஒழிவு மாத்திரமன்று. அம்மலம் மீளவும் பந்தியாம லிருக்கவேண்டும். மலம் தானாக நீங்காது. ஆன்மா பந்தமுற் றிருப்பதால் அதுவும் மலத்தை நீக்கிக்கொள்ள மாட்டாது. முதல் வன் அநாதியாகவே பந்தமடையாதவன். மலம் அவனைப் பந்திக்க மாட்டாது. அவனுடைய சத்தியின் முன்னே மலசத்தி முனைத்து நில்லாது. ஆதலால் அளவிலாற்றலுடைய அவனே ஆன்மாவின் மலத்தை நீக்கிக் காக்கவல்லவனாவன். அவனுடைய சத்தியே மலத்தை யொழிக்கவல்லது அவனுக்கு இரண்டு சத்திகளுள்ளன. ஒன்று கிரியாசத்தி. மற்றொன்று ஞானசத்தி. கிரியா சத்தி

மலத்தைப் போக்கும். ஞானசத்தி சிவத்தையளிக்கும், அதாவது சிவத்துவத்தை யுண்டாக்கும். அந்த இரண்டு சத்திகளையும் சந்தியாவந்தனக் கிரியையினுலே நாம் பாவித்து அடைகின்றோம். மலத்தை வெல்லும் சிவத்தின் சத்தி நம்மிடத்தே தங்கினுல் நாம் சிவவடிவமாவோம். சிவத்துவமடைந்த நம்மை மலம் பந்திக்க மாட்டாது. இதுவே சந்தியாவந்தனத்தின் தாற்பரியமாம்.

ஆசாரியர் சிவதீக்ஷா காலத்திலே மலசக்தியைக் கெடுத்துச் சிவசக்தியை நம்மிற் பதிக்கின்ருர். அவ்வாறு பதிந்த சக்தியை மேலும் மேலும் வளர்த்துப் பரிபூரணமாக்கிக் கொள்வதே சந்தியாவந்தனக் கிரியையாம்.

சந்தியாவந்தனத்திலே சலசுத்தி என்பது முதலாங் கிரியை. சலசுத்தியாவது சலத்திலே சிவத்தின் கிரியா சத்தியைப் பதித்தலாம். இரண்டாங்கிரியை அஸ்திர சந்தியோபாசனம். அஸ்திர சந்தியோபாசனமாவது சூரிய மண்டலத்திலே சர்வகர்ம சாக்ஷியாய் விளங்கும் சதாசிவ மூர்த்தியை வழிபட்டு அவருடைய அருளினுலே சர்வதத்துவ புவனங்களில் நிறைந்திருக்கும் பாவ புண்ணிய கன்மங்களை நீக்கிக் கொள்ளுதலாம். அதனுல் ஆன்மாவைப் பந்தித்த கன்ம மலம் நீங்கும். மூன்ருங்கிரியை ஆசமனம். இது ஆன்மாவைப் பந்தித்த மாயா மலத்தை யொழித்தல். மாயை கன்மத்துக்குத் தாரகமாய் அவ்வக்கன்மங்களுக்கேற்பத் தநு கரண புவன போகங்களாய் விரிந்திருக்கும். அத் தநு கரண புவன போகங்கள் சுத்த மாயையின் காரியமாகிய சிவதத்துவங்களினும், அசுத்த மாயையின் காரியமாகிய வித்தியாதத்துவங்களினும், பிரகிருதி மாயையின் காரியமாகிய ஆன்ம தத்துவங்களினும் விளைவுற்றிருக்கும். ஆன்மா கன்மாநுசாரமாக அத் தநு கரண புவன போகங்களையடைந்து சுக துக்க போகங்களை நுகரும். இங்கு இப்போக நுகர்ச்சிக்கு ஏதுவாகிய கன்மம் அஸ்திர சந்தியோபாசனத்தால் ஒழியவே அதற்குப் பற்றுக் கொடுத்திருந்த மாயையும் ஒழியுமாதலால் ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவம் சிவதத்துவம் என்னும் மூவகை முப்பத்தாறு தத்துவங்களையும் சுத்தி செய்து ஒழித்தலே ஆசமனக்கிரியை யாகின்றது. கிரியாசத்தி விருத்தியினுலேயே கன்ம மாயைகள் ஒழிய வேண்டுதலின், அக் கிரியாசத்தி வடிவாய் விளங்கும் தீர்த்தம் அதற்கு உபகரணமாகின்றது.

இதற்கு உபகரணமாகும் பொருட்டே கிரியாசத்தியைச் சலத்திற் பதிட்டை செய்யப்பட்டதென்பதும் நினைவிலிருக்க வேண்டும்.

இனி, கன்மமும் மாயையும் ஒழிந்தபின்னர் ஆன்மாவை விட்டொழிய வேண்டுவது ஆணவ மலம். அவ்வாணவ மலம் பராசத்தியால் ஒழியத்தக்கது. அதனால் அப்பராசத்தியை விபூதியிலே பதிட்டை செய்து, அவ்விபூதியைப் பராசத்தி வடிவமாகப் பாவித்து அணிந்துகொள்ளின், அப்பாவனை விசேடத்தால் ஆன்மாவினிடத்துப் பராசத்தி விளக்கமுற்று ஆணவமல இருளை அகற்றுதல் செய்யும். அதனால் ஆணவமலம் நீங்கும். ஆன்மா இம் மும்மலமும் நீங்கி முத்தனாவான். இங்கு கிரியாசத்தி வடிவாய் நின்ற ஆதிசத்தி நீக்கியது கன்ம மாயைகளையென்றும், ஞானமே வடிவாயுள்ள பராசத்தி நீக்கியது ஆணவமலத்தை யென்றும் அறியத்தக்கது. இப்பாவனையை எப்பொழுதும் பயின்றுவரின் அச்சத்திகள் கிரமக் கிரமமாக மேற்பட்டு உண்மையாகவே மல நீக்கம் செய்யுமென்பதில் ஐயமில்லை.

அதன் பின்பு சகளீகரணம் செய்யப்படும், சகளம்=வடிவம். கரணம்=செய்தல். மல வடிவு நீங்கிய உயிருக்குச் சிவ வடிவு உண்டாக்கல் சகளீகரணமாம். அச்சகளீகரணம் பல வகைப்படும். அவை தீக்ஷைக்கு ஏற்பத் தான் பெற்ற வடிவு எதுவோ அதனைப் பாவிக்கும் வேறுபாடுடையது.

சமய தீக்ஷிதர் உருத்திர வடிவம் பெறுவர். விசேட தீக்ஷிதர் சதாசிவ வடிவம் பெறுவர். லோக தர்மிணி நிருவாண தீக்ஷிதர் மகா சதாசிவ வடிவம் பெறுவர். சிவ தர்மிணி நிருவாண தீக்ஷிதர் சுத்தமாய் விளங்கும் சச்சிதானந்த சிவ வடிவம் பெறுவர்.

இந்நிலைகளுக்கேற்பவே சகளீகரணமுஞ் செய்யப்படும்.

முதல்வன் உயிர்கள் பொருட்டுச் சிவசத்தி வாயிலாக ஏற்குஞ் சரீரங்கள் மந்திர சரீரங்களேயாதலால், அவ்வடிவுகள் மந்திரங் கொண்டு பாவிக்கப்படுகின்றன.

உருத்திர வடிவு பெற்ற சமய தீக்ஷிதர் அங்க மந்திரங்களால் நியாசஞ் செய்யவேண்டும். சதாசிவ வடிவுபெற்ற விசேட நிர்வாண தீக்ஷிதர்கள் பஞ்சப் பிர்ம ஷடங்க மந்திரங்களால் நியாசஞ் செய்ய வேண்டும். சிவவடி வெய்திய சிவதர்மிணி நிர்வாண தீக்ஷிதர் ஐந்தெழுத்தினால் நியாசஞ் செய்யவேண்டும். அவ்வம்மந்திரப்

பொருளாயுள்ள சிவபேத வடிவங்களைத் தாம் பதித்தலே அவ் வேறுபாட்டுக்குக் காரணமாம்.

இப்படி மந்திர நியாசஞ் செய்து பயின்று வருதலினாலே அவ்வடிவு ஆன்மாவிற் பதிந்து ஆன்மா சிவ சொரூபியாவன்.

அதன் பின்பு ஆன்மாவைச் சுத்தமாகிய சிவத்தோடு சேர்த்தல் பிராணாயாமமெனப்படும். பிராண ஆயாமம்=பிராணனைத் தடுத்தல். இடைகலைபிங்கலை வழி இயங்கும் பிராணவாயுவைத் தடுத்துச் சுழுமுனையில் நிறுத்தவே கருவி கரணங்கள் தொழிற் படாதொழியும். மனம் ஒடுங்கும். ஆன்மா அவற்றின் சேர்க்கையைவிட்டு அப்பாற் சென்று சிவத்தையடையும். சிவம் ஆறுதாரங்களையுங் கடந்து அப்பாலுள்ளதாகலின், ஆறுதாரங்கடோறும் கருவிகளோடு கூடிச் சீவிக்குமான்மா, அவற்றினீங்கி அதீதமாயுள்ள சிவத்தையடைதல் அப்பிராணாயாமத்தின் பயனும். இதினும் மந்திர வேறுபாடு பாவனை வேறுபாடு முன் சொன்னபடி கொள்ளப்படும்.

அதன் பின்பு செய்யப்படுவது சந்தியாவந்தனம். காலை மத்தியானம் மாலை இரவு என்னும் வேறுபாடுகளுக்கேற்பச் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னுங் கிருத்தியங்களைச் செய்து நிற்கும் பிராமி முதலிய சிவசத்தி பேதங்களைத் தியானித்து அச்சத்தியின் பூரணப் பிரசாதத்துள் ஒடுங்கி அவ்வண்ணமாதல் சந்தியாத் தியான அபிப்பிராயமாம்.

அதன் பின்பு காலந்தோறும் ஈட்டப்படும் தூல சூக்கும வினைகளை யொழித்தல் மார்ச்சன அகமர்ஷணங்களாம்.

அப்பால் ஆதித்தமண்டல மத்தியில் விளங்கும் சிவபேத வடிவினை அவரவர் தியானிக்கும் வடிவாக வழிபட்டு நீரினாலே தருப்பணஞ் செய்தல் சந்தியாவந்தனமாம். தேவர் முனிவர் மனிதர் பூதங்கள் பிதுர்க்கள் என்னும் ஐவரைத் தருப்பணவாயிலாக வழிபடுதல் செய்யப்படும். தருப்பணம்=உவப்பித்தல். வழிபட்டு உவப்பித்தலே இவ்வந்தனத்தின் நோக்கமாம்.

இவ்வழிபாடு புண்ணியமாகி அப்புண்ணியத்தினாலே அருள் மேலிட்டு அதனால் முத்தி சித்திக்கும்.

இவ்வாறு மல நீக்கமும் சிவப்பேறுமாகிய பிரயோசனம் இச் சந்தியாவந்தனக் கிரியையினாலே வாய்க்கின்றது.

மலச்சார்பினாலே தன்னைச் சீவனென்றெண்ணிச் சனன மரணப்பட்டு இன்பத் துன்ப நுகர்ந்து துயருறும் ஆன்மா, காலங்

தோறும் அறுதினமும், மல நீக்கம் பெற்றதாகவும், சிவத்துவ மடைந்ததாகவும், சிவமாகவும் பாவித்துவரின், அப்பயிற்சி வசத்தினாலே சீவனென்னும் உணர்வினீங்கிச் சிவமென்னும் உணர்வு தலைப்பட்டு அவ்வுணர்வே மறுமைக்கும் வித்தாய் முத்திக்கு ஏதுவாமென்றல் சந்தியா வந்தனத்தின் அந்தரங்க அபிப்பிராயமாம்.

நம்மவரில் அநேகர் அருமையாகிய மனிதப் பிறப்பை யெடுத்தும் இச்சந்தியாவந்தன வாயிலாகச் சிவவடிவெய்தி முத்தியடைய விரும்பாமல் உலகமோகங்களுள் மூழ்கி எப்பொழுதும் சீவ பாவனையே செய்து மோசம் போகின்றார்களே. இஃது எவ்வளவு அறிவின்மை !!

---

## சிராத்தம்

### இந்துசாதனம் (3—4—19)

சிராத்தமென்பது தருமநெறியால் வந்த பொருளைச் சற்பாத்திரருக்குச் சிரத்தையாற் கொடுக்கப்பட்டதெனப் பொருள்படும் வடமொழியாம். பாவத்தால் வந்த பிறன் பொருளைக் கொடுத்தால் தருமம் பொருளுடையான் மேலும் பாவம் பொருள் கொடுத்தார்மேலும் நிற்கும். சிரத்தை, பிரீதி, ஆதரவு, பக்தி, விசுவாசம், அன்பு, பற்று என்பன ஒருபொருட் சொற்கள்.

சிராத்தமானது, தாய், தகப்பன், தகப்பனின் தகப்பன், அவரின் தகப்பன், மாதாவின் தாய், அவளின் தாய், காருண்ணிய பிதிர் ஆகிய எழு பேருக்கும், இட்ட பந்துக்கள், குரு, குருபத்தினி; முதலியோருக்கும் விசுவாசத்துடன் செய்யத் தக்க ஓர் புண்ணியக் கிரியையாம். ஒருவன் இவ்வுலகத்திலே வசிக்கும் தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றம், மித்திரர், குரு, குருபத்தினி முதலாயினோர்கள் மேல் கருணையுடையவனாயிருத்தல் அவசியமாதல் போல, இவ்வுலகத்திலில்லாது உடம்பைவிட்டுச் சென்ற முன்னோர் மேலும் கருணையுடையவனாய் அவர் தம்மையும் நினைவு கூர்ந்து அவர்களது ஆன்ம லாபத்திற்கேற்ற புண்ணியங்களை ஏற்ற காலங்களிற் செய்தல் அவசியமா மென்பதை அறிவுறுத்தலே சிராத்தத்தின் நோக்கமாகும். ஆகவே ஒருவன் இறந்தவர்களும் இறவாதிருப்பவர்களுமாகிய சகல சீவர்களிலும் கருணையுடையவனா யிருந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வேண்டிய காலத்துச் செய்ய வேண்டுமென்பது இதனாற் பெறப்படுகின்றது.

சைவசமயக் கிரியைகளில் இதுவும் ஒன்றாக அமைத்துச் சிவ கருணையை விருத்தி செய்த நமது முன்னோரது பேரறிவு சாலவும் வியக்கற்பாலதாம். இக்கிரியை வேதங்களாலும் சிவாகமங்களா லும் விசேஷமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. சிராத்தம் முன் குறிக்கப்பட்ட பிதிர்களின் திருப்தியின் பொருட்டுச் செய் வது. பிதிர்கள் கன்ம வசத்தால் முத்தியெய்தாது தேவகணத் தின்பாற் பட்டுளரேல் அவருக்கு அக்கினி மூலமாகவும், அசுரர் பாற்பட்டுளரேல் அவருக்குத் தக்ஷிணை மூலமாகவும், மனித சாதி யார்பாற் பிறந்திருப்பரேல் அவருக்கு மனிதபோசனத்தினாலும், பிசாசாகப் பிறந்திருப்பரேல் அவருக்குக் காகபலியிடுதலினாலும், பிரேதத்துவம் பொருந்தியிருப்பரேல் அவருக்கு அன்னம்பொரி முதலியனவற்றைச் சிந்துதலினாலும், யமலோகத்திருப்பரேல் அவ ருக்குப் பிண்டம் போடுவதினாலும், நரகலோகத்திருப்பரேல் அவ ருக்கு எள்ளும் நீரும் இறைப்பதினாலும் திருப்தியெய்துவர் என்று சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலின் நாம் சிவகருணை யும் நன்றியறிவுமுடையவராயிருந்தால் இச்சிரார்த்தத்தை மிகவும் பத்தியுடன் நடத்தல் வேண்டும். பிதுரர் கன்மவசத்துக்குத் தக்க படி சுவர்க்க நரக முதலிய லோகங்களில் தேவர் முதலிய சென்ம மெடுத்திருந்தால் அவர்களைக்குறித்து இங்கே செய்யப்படும் கிரியை களின் பயனை அவர்கள் பெறுவதெப்படியெனில் "பிதிரர்" என்று ஒரு சார்புத் தெய்வங்களிருக்கின்றன. அவைகள் இங்கே நடக் குங் கிரியைகளை யேற்று அவற்றின் பலனைக் குறித்துச் செய்யப் படும் ஆன்மா எவ்வுலகத்து எப்பிறப்பிலிருக்கின்றதோ அவ்வுல கத்து அப்பிறப்பிற் சேர்த்து விடுகின்றன. அதை அவைகள் கடவு ளாணையாற் செய்கின்றன. புரட்டாதி மாதமே பிதிர்களுக்கு மிகவும் உவப்பான காலம். அதிலும் புரட்டாதி அபரபக்கப் பிரதமை தொடங்கி அமாவாசை வரைக்குஞ் சிறந்தகாலமாம். அக் காலங்களிற் பிதிர்கட்குச் செய்ய வேண்டிய கிரியைகளை மெய்யன் போடுந் தவறாதியற்றி வருதல்வேண்டும். எத்துணைப் பெரும் வறி ஞராயிருப்பினும் பிதிர் கடன்களைத் தம்மாலியன்றவாறு செய்தால் அப்பிதிர்கள் திருப்தியெய்துவாரென்பது திண்ணம். அதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சிறு கதை கூறுவாம்.

ஒரு ஊரிலே மிகவும் வறிய ஒருவயோதிகவேடனிருந்தான். அவனுக்கு "மத்தன்" என்றொரு புத்திரனுண்டு. அவ்வயோதிகன் தன் புத்திரனைய 'மத்தன்' என்பவனால் தினமுங் காட்டிலே

வேட்டையாடிக் கொடுக்கப்படும் ஆகாரங்களைப் புசித்துக் காலங் கழித்துவந்தான். இங்ஙனம் வருநாளில் அவ்வயோதிக வேடன் வயதாகி யிறந்து விட்டான். இறந்ததும், மத்தனென்பவன் தன் தந்தைக்குச் செய்யவேண்டிய கிரியைக ளனைத்தையுஞ் செய்து பிரேதத்தைத் தகனஞ் செய்தனன். பின்னர் தன் தந்தை இறந்த தினத்தைக் குறித்துவைத்து அத்தினம் வருங்கால் பூசுரர்களுக்கு விதிப்படி சிராத்தங் கொடுத்துவந்தான். இவ்வண்ணமே அவன் தந்தையைக் குறித்துச் செய்துவருஞ் சிரார்த்தத்தைத் தவறாது மெய்யன்போடு பன்னிரண்டு வருடகாலமாக வியற்றிவந்தான். பதின்மூன்றாவது வருடம் வந்ததும் மத்தனென்பவன் தன் தந்தையைக் குறித்துச் செய்யுஞ் சிரார்த்தத்தைச் செய்யவியலா தவனாய் மிகவும் மனம் நொந்து தன் பூசுரரை யடைந்து தான் இவ்வருடம் தன் தந்தைக்குச் செய்யுஞ் சிரார்த்தத்தைச் செய்ய வியலாதவனா யிருத்தலைப்பற்றி அவருக்கு விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது பூசுரர் அவனைநோக்கி "மத்தனே, நீ மனம் வருந் தாதே. இப்பொழுது நீ சிரார்த்தஞ் செய்ய இயலாதவனாயின், இன்றையத்தினம் நீ ஒரு பசுவுக்குக் குளிப்பாட்டி அதைப் புஷ்பங் களினால் அர்ச்சித்துத் தூபதீபங்கொடுத்துப் பன்னிருதரம் அதை வலம் வந்து நமஸ்கரித்து இருகை நிறைந்த அறுகம்புல்லை அதற்கு உவகையோடும் ஊட்டுவாயாகில் நீ சிரார்த்தஞ்செய்த பலனை அடை வாய். அப்பொழுது பிதிரருந் திருப்தியெய்துவர்" எனப் புகன் றார். மத்தன் அங்ஙனமே உவகையோடுஞ் சென்று பூசுரர் கூறிய வண்ணம் ஓர் பசுவையடைந்து அதைக் குளிப்பாட்டி மலர்களினா லர்ச்சித்துப் பன்னிருமுறை வலம்வந்து நமஸ்கரித்துத் தூபதீபங் கொடுத்து இருகை நிறைந்த அறுகம்புல்லை அதற்கூட்டினான். இஃ திங்ஙனமாக, அவ்வூரை அரசாளும் அரசனுக்கு ஒரு குமாரனுளன். அவனுக்கு ஏறக்குறைய பன்னிரண்டு வயதுண்டு. அன்றைய தினம் அவ்வரசிளங்குமரன் போசன மருந்தி வெளி மாளிகையில் உலாவிவரும்போது ஏப்பம் விட்டான். அப்பொழுது அந்த ஏப்பம் புல்மணமாக அவனுக்கு மணந்தது. அதுகண்ட அவ்வர சிளங்குமரன் அதைத் தன் தந்தைக்குச் சொல்லிக்கொண்டிருக்கை யில், அவர்களின் குரு அங்கே வந்தார். உடனே அரசன் எழுந்து குருவை நமஸ்கரித்து ஆசனத்திருத்திப் பின்னர் தன் குமாரன் ஏப்பம் விட்டபொழுது புல்லுமணம் மணந்ததைக்கூறினான். குரு சிறிதாலோசித்துப் பின்வருமாறு கூறினார். "ஏந்தலே, தங்கள்

புத்திரராகிய அரசிளங்குமரர் முற்சென்மத்தில் இவ்வூரிலிருக்கும் "மத்தன்" என்னும் வேடனின் தந்தையாயிருந்தார். மத்தனென்பவன் தந்தையிறந்ததும் அத்தினத்தைக் குறித்துச் சிரார்த்தஞ் செய்துவந்தான். ஆயின் இவ்வருடம் இன்றையதினமே அவ்வேட னிறந்ததினம். அம்மத்தன் இவ்வருடம் சிரார்த்தஞ்செய்ய இயலாது பின் ஒரு பசுவைப் பூசித்து அதற்குப் புல்லூட்டினன். ஒரு பிதிரைக் குறித்து ஒருவன் எது செயினும் அப்பிதிர் எச்சென்மத்தி லிருப்பினும் அது சென்றடையும் ஆதலின் மத்தன் கொடுத்த புல்லை அப்பசு உண்டமையால் அப்பலன் தங்களது குமாரனை வந்தடைந்தது. இதுவே அதன் மர்மம்" என்று கூறிமுடித்தார். இவையனைத்தையுங் கேட்ட அரசனும் அரசிளங்குமரனும் அதிக சந்தோஷமடைந்து, அம்மத்தனென்பவனை யழைப்பித்து அவனுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்து வாழ்ந்தார்கள்" என்று கூறப்பட்டுளது. ஆதலின், நாமெல்லாம் பிதிர்களுக்குச் செய்யவேண்டிய கடன்களை அவ்வக்காலங்களிலே தவறாது மெய்யன்போடுஞ் செய்து அப்பிதிர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று இஷ்டசித்திகளை யடைந்துய்வோமாக.

---

## சித்தாந்தம்

### சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் இயற்றியது

சித்தாந்தம் என்பது முடிபு என்று பொருள்படும். முடிபு எனவே, தனக்குமேலொரு கொள்கையு மில்லாதது என்று பெறப்படும். இம்முடிபு எங்கே பெறப்பட்டதெனின், சிவாகமத்திற் காண்க. இதனால் சிவாகமத்திற் பெறப்பட்ட முடிபே முடிபெனவும், அதுவே சித்தாந்த மெனவும், அதற்குமேலிட்டதொரு சித்தாந்த மின்றெனவும் வெளிப்பட்டது. இந்த வுணர்ச்சியால், சித்தாந்தம் என்பது ஆகமமுடிபு என்று நிச்சயிக்கப்பட்டது. ஆகமாந்த மெனினும், சித்தாந்த மெனினும் ஒக்கும். ஆகமாந்தமாகிய சித்தாந்தமே சைவமெனவும் படும். எனவே, சைவத்தின் மேலிட்டதொரு சமயமு மின்றென்பது நாட்டப்பட்டது. "சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளை" என்று கூறிய தாயுமான சுவாமிகள் தெய்வத் திருவாக்கானுங் காண்க. "சமயாதீதப் பழம்பொருள்" என்றதனால், சைவ சமயத்தினும் அதிகரித்த வேதாந்த ஞானமென்று சிலர் கூறுவர். அது "யாங்களே

கடவுளென்றிடும் பாதகத்தவரும்'' என்று கூறிய வாக்கியத்தால் மறுக்கப்படுதலின், அங்ஙனங்கொள்வது குற்றமாம். மற்றெவ்வாறு கருதப்படுமெனின், அதீத சமயமென வெளிப்பட்டு முன்னர்க் கூறிய சைவத்தையே வலியுறுத்துமென்க. "அயர்வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்தி லமர்ந்தது வைதிகசைவமழகிதந்தோ" எனவும், "சந்தான கற்பகம்போலருளைக் காட்டத் தக்கநெறி யிந்நெறியே தான் சந்மார்க்கம்'' எனவும் போந்த வாக்கிய விசிட்டத் தானுங் காண்க. இதனால், "சமயாதீதப் பழம்பொருள்" என்றது அதீதமாகிய அச்சைவத்தாற் பெறப்பட்ட வுண்மைப்பொருள் என்று நாட்டப்பட்டது. ஆகமாந்தம், சைவம் என்னும் பரியாய நாமங்களையுடைய மார்க்கமொன்றே சித்தாந்தமாயின், இச்சித்தாந்தத்தின் கீழ்ப்போந்த பூர்வபட்சங்கள் யாவை? அவற்றிற்குரிய பிரமாணங்கள் யாவை? எனின்; உலகாயதம், புத்தம், சமணம், பாட்டம், பிரபாகரம், கிரீடாப்பிரமவாதம், சத்தப்பிரம்மவாதம், மாயாவாதம், பாஞ்சராத்திர முதலியன பூர்வபட்சங்களும், வேதமுதலியன பிரமாணங்களுமாம். வேதம் சப்பிரமாணமும், சுவதப்பிரமாணமுமாக, அதிற்பெறப்பட்ட மார்க்கங்கள் பூர்வபட்சமாத லெங்ஙன மெனின், விளக்குதும், வேதம் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திர ரூபமா யிருப்பதொன்று. பல பொருள் கொண்டியங்கலால் ஒன்றிலொன்று முரணிய சித்தாந்தம் யாவும் அவ்வேதத்தி னுண்மைப்பொருளாத லிழுக்காம். பல பொருள்களில் ஒன்றே அவ்வேதத்தினுண்மையாதல் திண்ணம். இதனால், வேதம் சப்பிரமாண மாதலும் அதிற் பெறப்பட்ட மாத்திரத்தானே யெல்லா மார்க்கங்களும் சித்தாந்த மாகாமையும் வெளிப்பட்டது. மற்ற யாவும் பூர்வபட்சமேயாகி ஒரு பொருளே அந்த வேதத்தின் சித்தாந்தமு மாதல் துணியப்பட்டது. பூர்வ பட்சங்களாய்ப் போந்த மார்க்கங்கள் பலவும், சித்தாந்தப்பட்ட மார்க்கமொன்றும் அவ்வேதத்திற் பெறப்படுங்கால், அச்சித்தாந்தம் இதுவே யென வொன்றைச் சுட்டுவது கஷ்டதரம். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள்கையே அச்சித்தாந்தமென்று கூறுகையால்.

வேதத்திற் பெறப்பட்ட மார்க்கங்களுள் சைவமும் ஒன்றேயாக, அதற்கு மித்தோடம் வருமே யெனின், தத்தோஷத்தைப் பரிகரிப்பாம். வேதம் சிவபெருமானால் சொல்லப்பட்டது. உலகாயதன் முதலிய சமயிகள் அவ்வேதத்தைத் தங்கள் கன்மம் வழி

விட்டபடியே யுணர்ந்து பொருள் கூறித்தியங்கினர். வேதத்தைச் சொன்னவர் பதிப்பொருளாயுள்ளவர். அவர் இயற்கையே பாச மில்லாதவர். அவர் திருவாக்கை யுணரப் போந்தவர்கள் பாச பத்தாளாயுள்ள பசுக்கள். பசுக்களெனவே, கன்மத்தாற் பிணிக் கப்பட்டுச் சன்மபந்தத்தைப் பெற்றியங்கு மவரென்பது வெளிப் பட்டது. இன்னலட்சண யுக்தாளாயுள்ள பசுக்கள் தாங்கள் தாங் களே பதிவாக்கை யுணரத் தொடங்குங்கால் கன்ம வேறுபாட் டால் பல்வேறு வகைப்பட்ட தீமையிற்செறிந் தழுங்குவரன்றித் தமக்குத் தாமேயுண்மையை அறிவரென்பது அசங்கதம். ஒவ் வொருவரும் வேதத்திலுள்ள வாக்கியங்களைத் தத்தங் கன்மத்துக் கீடாகப் பொருள் கொண்டு எம்மசித்தாந்தம் வேதத்திற் பெறப் படலால் யாமே வேதாந்தி! யாமே வேதாந்தி!! என்று இறுமாந்து கூறுவதொன்றே யொழிய வேதத்தி னுண்மைப் பொருளிதுதா னென வொன்றைச் சுட்டியறிந்து நிச்சயிக்கும் வரையில் வேறு ஒரு பயனுமெய்தாரென்க.

இவர்களுள், ஆன்மாவே பொருளென மயங்கும் ஏகான்ம வாதி யொருவனே மற்றைச் சமயிகளை நோக்கத் தானே முழு வேதாந்தியென்று வெளிப்பட்டிருக்கின்றனன். இவன் வேதாந்தி யாதல் சாலுமோ எனின், இவனே பாசபத்தனுயுள்ள ஓர் பசு, கினை ப்பு மறப்புகளாகிய சகல கேவலங்களிற் றடுமாறி யுழல்கின்றவன். இவன் வேதத்தை யுணர்ந்தபோது இவனுணர்ந்தபொருளே யுண்மை யென்பதற்கு யாது பிரமாணம்? இப்படியே மற்றைச் சமயப் படுகுழிகளில் வீழ்ந்து தடுமாறும் பசுக்களும், அவரவர் கள் வேதத்தை யுணர்கையில் அவற்றைத் தனித்தனி யுண்மை யென்று அங்கீகரித்த பிரமாணங்கள் யாவை? தாங்கள் தாங்களுங் கூறும்பொருள்கள் நின்மலமாயுள்ள வேறு பிரமாணத்தால் அங்கீ கரிக்கப்பட்டா லொழிய உண்மையாதலிழுக்காம். நின்மலமாயுள்ள வேறு பிரமாணமெனவே, நின்மலன் சிவனேயாதலால் அந்தப் பிர மாணமும் அப்பதிவாக்கே யாதலமையும். பதிவாக்காகிய வேதத் துக்குப் பசுக்கள் கூறும் பொருள்கள் அப்பதிவாக்கானே யங்கீ கரிக்கப்பட வேண்டுமென்பது நாட்டப்பட்டது. பதிவாக்கைப் பசுக்களொருபோதுந் தாமேயறியாராகையால் பசுக்கள் அதை அறிந்தாரென்பதும், அறிவாரென்பதுஞ் சர்வாபத்தமாம். "அறி வித்தாலன்றி யறியாவுளங்கள்" என்னும் பிரமாணத்தால் வேதத் தின் பொருளும் அவனறிவித்தாலன்றி அறிவாரொருவருமிலர்.

வேதத்துக்குரியபொருள் இதுவே! இதுவே!! என்று பாஷ்யங்கள் செய்து வெளிப்படுத்திய சமயிகளும் தாங்கள் தாங்கள் கூறுஞ் சித்தாந்தங்களை நாட்டுவதற்கு உதகரித்துக் காட்டிய பிரமாணங்கள் பதிவாக்குக எல்லாமையால், அவரவர் சித்தாந்தங்களோடு அவர்கள் காட்டப்போந்த பிரமாணங்களு மவலப்பட்டழியும். பிருகஸ்பதி, கபிலர், அக்ஷபாதர், சைமினி, வியாசர், விஷ்ணு முதலியவர்கள் செய்த நூல்களே வேதார்த்தங்களாக வொவ்வொரு சமயிகளுங்கொண்டு வெளிப்பட்டனர். பிருகஸ்பதி முதலாயினாரும் பாசபத்தர்களாதல் திண்ணமாக, பசுக்களாகிய வன்னோர் வாக்குகள் பதிவாக்குக்குப் பொருளாவதெப்படி? ஒருகாலும் பொருள்களாகாவாம். பிருகஸ்பதி முதலாயினோர் சிவானுக்கிரகம்பெற்ற மேலோர்களாக, அவர்கள் வாக்குகள் ஏன் பிரமாணமாகா வெனின், அதிகாராநுகுணமாய்ப் பிரமாணமாதல் பெறும் எனவே, ஒன்றிலொன்றேற்றமுடைய சாதகசாத்தியப் பிரமாணங்களாம். ஒன்றிலொன்று முரணிய சித்தாந்தங்களை அவர்கள் ஏன் கூறினரெனின், ஆன்மாக்களுடைய கன்மவேறுபாடு நோக்கியாம்.

எங்ஙனமெனின், தேகேந்திரியப் பிராணாந்தக் கரணதர்மமான விசாரத்தில், நிர்விசாரகிரஸ்தனை வொருவனைப்பார்த்துத் தேகமே பொருளென்று சாதித்தும், தேகவிசாரங் கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி அதற்குமேலிட்ட பொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இது வல்லபொருள் இந்திரியமே பொருளென்று சாதித்தும், இந்திரிய விசாரங்கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்ட வழி, அதற்குமேலிட்ட பொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்ல பொருள் பிராணனே பொருளென்று சாதித்தும், பிராணவிசாரங் கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்கு மேலிட்டபொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்லபொருள் கரணமே பொருளென்று சாதித்தும், கரணவிசாரங் கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்ட பொருளையுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்ல பொருள் ஆன்மாவே பொருளென்று சாதித்தும், ஆன்ம விசாரங் கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்கு

மேலிட்டபொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வ பட்சமாக்கி இதுவல்ல பொருள் இந்திரனே பொருளென்று சாதித்தும், இவனல்ல சந்திரனேயெனவும், இவனல்ல பிரமனே யெனவும், இவனல்ல விட்டுணுவே யெனவும் முறையே யாவரையும் பொருள்களெனச் சாதித்தும் உணர்த்துவது முறையாதல் இழுக்கடையாமை காண்க. குழந்தைக்குப் பாலூட்டும் பருவத்திற் பாலூட்டியும், சோறூட்டும் பருவத்திற் சோறூட்டியும் வளர்த்தல் உபகாரமாதல் கண்டுதெளிக.

இந்த விசாரத்தால் ஆன்மாக்களுடைய கன்மத்துக் கீடான வுணர்ச்சியைப் பயப்பனவாகிய சித்தாந்தங்களைப் பிருகஸ்பதி முதலாயினோர் பிரகாசப்படுத்திய தந்திரம் வெளிப்பட்டது. பிருகஸ்பதி முதலாயினோர் செய்த சித்தாந்தங்கள் வேதத்திற் பெறப்பட்ட பொருள்களேனும், அவை யுண்மைப் பொருளாகாமையால் வேதத்துக்குப் பாஹ்யசித்தாந்தங்களேயாயின. அச்சித்தாந்தங்களை வேதமே பலவிடங்களில் நிஷேதித்துக் கூறுகையால், அவற்றை முன்னரங்கீகரித்தது சாமாந்யாதிகாரிகளுக்கு அநுக்கிரஹமாகவும், பின்னர் திரஸ்கரித்தது உத்தமாதிகாரிகளுக்கு அநுக்ரஹ மாகவுமென்பது தெளிக. வேதத்திற் பெறப்பட்டமாத்திரத்தானே யமையாது வேதத்தால் நிந்திக்கப்படாமையும் பெற்றமையு மார்க்கமொன்றே அவ்வேதத்தின் றுணிபொருளாதல் நிச்சயிக்கப்பட்டமையால், அவ்வுத்தம மார்க்கம் சைவமார்க்கமென்பது சொல்லாமேயமையும். சைவமொன்றையே பிரதிபாதிக்குஞ் சிவாகமங்களுக்கும் அவ்வேதத்தைச் சொல்லியருளிய சிவபெருமானே வக்தாவாகையால்.

வேத சிவாகமங்க ளிரண்டும் பதிவாக்குகளாகையால் ஒன்றிலொன்று முரணுமை வெளிப்பட்டது. கன்மவேறு பாட்டையுடைய வுயிர்கள்பொருட்டுப் பொருள்பலபட வேதத்தைக்கூறிய சிவபெருமான் அவ்வேதத்திற் பெறப்படும் பொருள்களில் தம்முடைய முடிபொருளு மொன்றே யாதனேக்கி, அது எதுவெனமயங்காதவழி அப்பெருமை தோன்ற வேதத்துக்குச் சிவாகமங்களைப் பாஷ்ய மெனச்செய்தனர். ஆகவே வேதம் சூத்திரமும், சிவாகமம் பாடியமு மெனக்கொள்ளப்பட்டன. சிவவாக்காகிய வேதத்துக்கு உலகாயதம், மாயாவாதம், பாஞ்சராத்திர முதலியன பாடியங்களாய்ப் பிருகஸ்பதி முதலாயினோரால் செய்யப்பட்டமைகொண்டே அவை வேதத்தினுண்மைப் பொருள்களாகாவாம்.

வேதத்தைச்செய்த சிவபெருமான் அதற்குப் பாடியம் தாமே செய்திருத்தலால். மூலக்காரரே யுரையுஞ் செய்துள்ளாராக, அவ் வுண்மையுரையைக் கைவிட்டு வேற்றுரைகளின் மொத்துண்டலைவ தெற்றுக்கு? அவ்வேற்றுரைகள் பதிவாக்குக ளல்லாமையால். பிற பசுக்களுரையை நாம் பற்றுவதைக் காட்டிலும் பசுக்களாகிய நாமே நமக்கு விளங்கியவழியேன் பொருள் கொள்ளக்கூடாது? பசுக்களுக்குப் பசுக்களாவுண்மை யுணர்த்தற்பாலார்? குருடனுக் குக் குருடனோ கோல் கொடுப்பவன்? ஆகவே, பசுமார்க்கங்களாகிய இக்குருட்டு ஞானங்களில், பதிமார்க்கமாகிய சிவஞானமுமொன்று தல் நிகழாமைகண்டு தெளிக. உலகாயதமுதலிய ஞானங்கள் பதிவாக்கிற் பெறப்பட்டமையால் அவ்வாக்குக் கிழுக்குண்டா மெனின், இல்லாமையை விரிப்பாம். கண்ணாடியின் முற்பட்ட பொருள்களை அவைதன்னிட முள்ளனபோல் அது காட்டியது கொண்டே அப்பொருள்களை அக்கண்ணாடியிற் றாதான்மியப் பொருள்களெனக் கொள்பவர் யாவர்? கண்ணாடிக்கு அத னொளியே தாதான் மியமாதலமையும். அதிற்காணப்பட்ட பொருள்கள் அதிலில்லாத பொருள்களாதல்போல் வேதத்திற் பெறப்பட்ட பொருள்கள் அவ்வேதமாகிய கண்ணாடியிலில் பொருள்களேயாம். கண்ணாடிக்கு ஒளியே யுள்பொருளாதல் போல் வேதத்துக்குச் சிவாகமமே யுள்பொருளாகிய தாதான்மிய சம்பந்த முடைத்தென்க. எதிர்ப்பட்ட பொருள்களைத் தன்னிடங் காட்டியதுகொண்டு கண்ணாடிக்கொருதாழ்வு மில்லாததுபோல் பலசித்தாந்தங்கள் பதிவாக்கிற் பட்டமைகொண்டு அவ்வாக்குக் கொரு தாழ்வு மின்றென்க.

வேதாந்த சூத்திரத்துக்குப் பாடியஞ்செய்தருளிய ஸ்ரீகண் டாசாரிய சுவாமிகள் "வயந்து வேத சிவாகமயோர்ப்பேதம் - நபஸ் யாம: வேதோபி சிவாகம:" என்னும் வாக்கியத்தால் வேத சிவாக மங்கட்குப் பேதங் காண்கின்றிலம். வேதமே சிவாகமம் என்று அவற்றின் அபேதத்தை விளக்கியிருத்தல் காண்க. ஸ்ரீ பாஷ்யத் தில் வேத சிவாகமங்கட்குப் பேதமின்மை பிரசங்கிக்கப்பட் டிருத்தலின், வேதவிருத்தமாகிய சிவாகம பாஹ்ய சித்தாந்தி களாகிய மற்றைப் பாஷ்யகர்த்தர்கள் வேத பாஹ்யரேயாயினர். சைவ பாஷ்ய கர்த்தா வொருவரேயன்றி மற்றைப் பாஷ்யகாரர்கள் கன்ம வேறு பாட்டையுடைய பசுக்கள் கூறிய நூல்களை யெல்லாம் பிரமாணமாகக் கொண்டமையால், ஸ்ரீ கண்டாசாரியர் தமது

பாஷியத்தில் வேதசிவாகமங்களையேயன்றி வேறு நூல்களையுந் தழுவியதுண்டேயெனின், "அன்னிய நூலின் விதிய விரோதமேலுன்னேல் பழுதென்றுளத்து" என்னும் நியாயம் வெளிப்படலால் அவரங்ஙனந் தழுவியது தோடமன்றென்க. இந்த விசாரத்தால் சைவபாஷ்ய மொன்றே வியாசருண்மைக் கருத்தினதெனவும், மற்றைப் பாஷ்யங்கள் அவற்றைச் செய்தவர் கன்மவயத்தினவெனவும், முன்னையது சத்திநிபாதர்க் குரித்தெனவும், பின்னையவை சாமாநியர்க் குரியனவெனவும் நிச்சயிக்கப்பட்டது. சைவபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீ கண்டமூர்த்திகள் சிவபெருமானுடைய ஸ்ரீ கண்டத்தின் அமிசம்பெற்று அவதரித்த வுண்மை நோக்கியே அவர்க்கு அத்திவ்யத்திருநாமம் வந்தமை காண்க. இவ்வுண்மையை ஸ்ரீ கண்ட விஜயத்திலும், பவிஷ்யோத்தரத்திலுங் காண்க. இவ்வாசாரியர் கூற்று சர்வசம்பிரதி பன்னமென்பதை விளக்குவான் உலகன்னையாகிய ஔவை யென்பவர் அருளிச்செய்த உண்மை வாக்கியம் வருமாறு. "தேவர்குறளுந் திருநான்மறைமுடிவு, மூவர்தமிழு முனிமொழியுங், கோவை, திருவாசகமுந் திருமூலர் சொல்லு மொருவாசக மென்றுணர்" என்னுந் திருவெண்பாவில் திருக்குறள், உபநிடதங்கள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திர முதலிய சித்தாந்த நூல்களோடு வியாச சூத்திரமும் ஒன்றெனச் சேர்க்கப்பட்டிருத்தலின் முனிமொழியெனப் போந்தவச்சாரீரக சூத்திரம் சித்தாந்த பிரதி பாதிதமென்பது சொல்லாமே யமையும். ஆகவே, சைவபாஷ்ய மொன்றே அதற்குரித்தென்பது நாட்டப்பட்டது. இன்னும் "வேதமொடாகம மெய்யாமிறைவனூ, லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக, நாதனுரையிவைநாடி லிரண்டந்தம், பேதம தென்னிற் பெரியோர்க்க பேதமே" என்று திருமூலதேவர் திருமந்திரத்திற் கட்டளையிட்டுள்ள வாக்கியமுஞ் சான்றென்க. மேல் விசாரத்தால் வேதமே சிவாகமம், சிவாகமமே வேதம் என்னு முண்மை வெளிப்படலால் சிவாகம மொன்றையேயன்றி வேறு வியாக்கியானங்களை வேதத்துக் குரிமையெனக் கோடல் அசங்கதமென்க.

வேதமுஞ் சிவாகமமு மொரு சித்தாந்தத்தை விளக்கவந்த மூலமும் உரையுமாக, ஆகமத்தை நோக்க வேதத்தைப் பூர்வ பட்சமென்ற தென்னையெனின், சநகர் முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதி ஞானம் நிலைபெறாதவ ராயினரெனவும், பின்பு ஆகமாந்தமென்னும்

பெயரையுடைய சித்தாந்தத்தை யோதி ஞானம் நிலைபெற்றன ரெனவும் சங்கரசங்கிதையிற் கூறியவாற்றால், வேதத்தினும் சிவாக மத்திற்குப் பிராமாண்யம் வெளிப்பட்டது, வேதம் தன்னை ஆசிரபிக்கும் எல்லாச் சித்தாந்தங்களும் தன்னிடத்தி லுள்ளன வாகவே காட்டுந்தன்மை யுண்மையால். அப்படிக் காட்டுங்கால், காணப்படு மொவ்வொன்றினும் பிரமாண புத்தி பண்ண வருந் தோஷ மேற்கொண்டியங்கல் திண்ணம். ஆகவே, மயக்கவறிவை விளைப்பதொன்றாக நிச்சயிக்கப்பட்டது அது சாமாநியராகிய உலகர்க்கே சிவனால் கொடுக்கப்பட்ட தென்னு முண்மையால். இந்த விசாரத்தால் அது சந்நிநிபாதர்க்கு உபயுக்தமாகாதென்க. இந்த நியாயம்பற்றியே ஆகமத்தை நோக்க அது பூர்வபட்ச மாயிற்று. வேதத்தினந்தம் வேதாந்தம் ஆவதுபோல் ஆகமத்தி னந்தம் ஆகமாந்தம் என்பது அமையும். அப்படிக்குக் கூறாது சித்தாந்தம் என்று வழங்குமாற்றால், ஆகமாந்தமே சித்தாந்தமென் னும் பரியாயநாமத்தைப் பெற்றமை வெளிப்பட்டது. இதனால், ஆகமாந்தத்துக்குப் பரியாய நாமம் வந்ததுபோல் வேதாந்தத்துக் கும் பரியாயநாமம் வந்திருத்தலை நோக்கின், அது பூர்வபட்சம் என்னும் பெயர்த்தாம். ஆகவே, வேதாந்தம் பூர்வபட்சமும் ஆக மாந்தம் சித்தாந்தமுமாதல் வெளிப்பட்டது. "ஒரும் வேதாந்த மென்றுச்சியிற்பழுத்த, வாராவின்ப வருங்கனிபிழிந்து, சாரங் கொண்ட சைவசித்தாந்தத், தேனமுதருந்தினர் சிலரே" என்னும் வாக்கியத்தானும் பூர்வபட்ச சித்தாந்தங்களாகிய வேதாந்த ஆக மாந்தங்களினுண்மை பெறப்பட்டது. இச்சித்தாந்தமாகிய ரத் னங்களுண்டாகும் சமுத்திரம்போல்வதொன்றாக எமது நூல்கள் வெளிப்படு மாற்றால், பிறமுடிபுகளைக் கீழ்ப்படுத்திச் சைவமொன் றினையே நாட்டவெழுந்த நூலுக்கு சித்தாந்த ரத்நாகரம் என்னும் பெயர் சூட்டப்பட்டது'—இன்னும் விரிக்கிற்பெருகும்.

---

## பொற்கைப் பாண்டியன்

நமது நாட்டில் நீதி தவறாது செங்கோல் செலுத்திய மன்னர் களுள் பாண்டியநாடாண்ட பொற்கைப் பாண்டிய னென்பவ னொருவன். இவன் பொது ஜனங்களின் விருப்பத்தை எவ்வளவு வரை மதித்து அரசாண்டு வந்திருக்கிறானென்பது வருஞ்சரிதத் தால் விளங்கும். இவன் பாண்டியர்களுள் ஒருவன். இவனது

இயற்பெயர் வேறு. பொற்கைப் பாண்டியன் என்ற இப்பெயர் ஒரு காரணத்தால் இவனுக்கு வந்ததாகும். அதனைப் பின்னர்க் கூறுவேன். இவன் தன்னாட்டை "மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத், தானதனுக்கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா, லூனமிகு பகைதிறத்தாற் கள்வரா லுயிர்தம்மா, லான பயமைந்துந்தீர்த் தறங்காப்பானல்லனோ' என்ற செய்யுளுக்கேற்ப உயிர்கட்கு நேரக்கூடிய ஐந்து பயத்தையும் போக்கி நீதிவழுவாது அரசாண்டு வந்தான். நமது பண்டைக்கால அரசர்கள் தம்நாட்டின் நிலைமையைத் தாம் நேரில் அறிந்துகொள்வதற்கு இரவில் மாறுவேடம் பூண்டு வீதி வீதியாயலைந்து விஷயங்களைத் தெரிந்துகொள்வது வழக்கமாக விருந்ததால் அதுபோலவே நமது பொற்கைப் பாண்டியனும் இரவில் மாறுவேடம் பூண்டு தானரசனென்பதையே பிறரறிந்து கொள்ளாதவாறு தெருத்தெருவாகத் திரிந்து யாராருக்கு என்னென்ன குறையிருக்கிறதென்று கவனித்து வருவான். அவர்கள் குறையை நிவர்த்திக்கத் தான் செய்ய வேண்டியது ஏதேனுமிருப்பின் அதனைச் செய்வான். இப்படியிருக்க ஓர் நாள் அரசன் வீதியிற் போய்க்கொண் டிருக்கும்பொழுது ஒரு வீட்டினுள் சப்தம் உண்டாயது. உற்று நோக்கினான். அது ஓர் ஏழை பிராமணனின் வீடாகக் காணப்பட்டது. அங்குப் புருஷனும் மனைவியும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். மனைவியைப் பார்த்து புருஷன் "பெண்ணே! எனக்குக் காசிக்குப் போக வேண்டுமென்ற விருப்பமிருக்கிறது; நான் எப்படியேனும் போய்வருகிறேன். நீ ஜாக்கிரதையாகவிரு; உனக்குத் தந்துவிட்டுப் போக என்னிடம் பொருளில்லை; நீ ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம்; உன்னைப் பாண்டியனது செங்கோல் காக்கும்" என்று கூறினான். இதனை நன்றாகக் கேட்டுக்கொண்டு சென்றுவிட்டான் அரசன். சொன்னபடியே பிராமணன் மறுநாள் காசிக்குப் போய்விட்டான். தந்நாட்டில் யாராருக்குச் சாப்பாட்டுக்கு இல்லாமற் போனாலும் கொடுத்தலைத் தனது கடமையாக வைத்திருந்த நமது அரசன், இவ்வேழை வீட்டிலுள்ள தரித்திர நிலையையும் தனியே சம்பாதிக்க வழியின்றி யிருக்கும் ஒரு பெண்ணின் தன்மையையும் கண்டும், "பாண்டியன் செங்கோல் காக்கும்" என்ற வார்த்தையைக் காதாற் கேட்டும் வாளாவிருக்க ஒருப்படுவனோ? இப்பெண்ணிற்குச் சாப்பாட்டிற்குக் கொடுக்க வெண்ணினான். இவனுக்கு ஒரு யோசனை வந்துவிட்டது. தன்மனத்தில் ஒரு சிறிதும் களங்க

மற்றவனெனினும் திடீரென்று புருஷன் ஊரிலில்லாது தனியே யிருக்கும் ஒரு பெண்ணிற்கு அரசன் சாப்பாட்டுக்குக் கொடுக்க வேண்டிய காரணம் என்ன என ஜனங்கள் நினைந்து இரவில் புருஷன் சொன்னதையும் அரசன் கேட்டதையும் ஜனங்களறியமாட்டார்களாதலின் அவதூறாகப் பேசுதல் கூடுமென்று அஞ்சினன். ஆனால் அதன் பொருட்டுப் பேசாது வாளாவிருந்து விடுதல் கடமைக்கு விரோதமென வெண்ணினன். எவ்விதத்தும் அந்தப் பெண்மணிக்குச் சாப்பாட்டுக்குக் கொடுத்துத் தீரவேண்டுமென்று கருதி ஒரு யுக்தி செய்தான். அக்கிராமத்திலுள்ள பிராமணர் எல்லோர்க்கும் நித்தியம் அரிசி காய் கறி கொடுப்பதற்காகப் பறையறைவித்தான். அதுபோல் எல்லோர்க்கும் கொடுத்து வந்தான். பிறகு அந்தப் பெண்ணின் கற்பைக் காக்க வேண்டுமே அதுமுக்கியமாதலின் இரவில் வீதிகளிற் சுற்றி வரும்பொழுது அவ்வீட்டை மிகவும் கவனித்து வருவான். இப்படியே சில மாதங்கள் கழிந்தன. காவலன் என்ற பெயரை உலகிற்கு மெய்ப்பிக்க நகரை இரவும் பகலும் காவல்புரிந்து வந்தான். இப்படியிருக்க, பிராமணன் ஊருக்குச் சென்று சில மாதங்கள் கழிய, ஓர்நாள் அவ்வீட்டின் முன் அரசன் மாறுவேடம் பூண்டு வரும்பொழுது அவ்வீட்டினுள் புருஷத்தொனி கேட்டது. உற்று நோக்கினனரசன். ஒரு புருஷன் அவ்வீட்டிற்குரிய பெண்ணோடு பேசிக்கொண்டிருக்கக் கண்டான். அரசனுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ஒருகால் புருஷன் ஊரிலிருந்து வந்துவிட்டானோவென வெண்ணினன். அல்லாமல் வேறு புருஷனாகவிருப்பின் சும்மாவிட்டுவிடக் கூடாதாகலின் இதனை எப்படித் தெரிந்துகொள்வதென யோசித்தான். ஒரு முடிவிற்கு வந்தான். கதவைத் தட்டுவோம், உள்ளேயிருப்பவர்கள் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து விஷயத்தையறிந்து கொள்ளலாமென வெண்ணிக் கதவைத் தட்டினன். உள்ளிருந்த புருஷன் கெம்பீரமான குரலுடன் "யார் கதவைத்தட்டுகிறது" என்றான். அரசன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அன்னிய புருஷனாகவிருந்தால் வெளியிலிருந்து ஒருவர் கதவைத்தட்டியவுடன் ஓடியொளிய வழி பார்ப்பானேயன்றி யாரென்று இப்படிக் கேட்கமாட்டானாகலின் இவன் சொந்த புருஷனாகத்தானிருக்கவேண்டும்; ஊரிலிருந்து வந்துவிட்டான் போலுமெனத் தீர்மானித்துக்கொண்டான். அவனுக்குப் பெரியதொரு சந்தேகம் வந்துவிட்டது. சொந்த புருஷன் நீண்ட நாட்சென்று இன்றுதான் வந்திருக்கிறான்,

"நாம் ஊரிலில்லாதபொழுது இங்குத் தினசரியாரேனும் வருவது வழக்கம்போலும்! அதுபோல் இன்றும் நாம் வந்தது தெரியாது. வந்து கதவைத் தட்டிய ஒருவன் நாம் வந்தது தெரிந்து ஓடிவிட்டான்போலும்!" எனத் தன் மனைவியைச் சந்தேகிப்பான், என் செய்வது. நாம் செய்தது பெரிய பாதகச் செயலாகவன்றோ ஆகிவிட்டது. இந்தப்பழிக்கு நாமாளாகலாமோவென ஏங்கினன். சட்டென்று ஒரு யோசனை செய்தான், வீடுகள்தோறும் கதவுகளைத் தட்டிவிட்டால் இந்தச் சந்தேகம் இவனுக்கிருக்கமாட்டாது, என்று எண்ணி ஒரு வீடு தவறாது எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிவிட்டு அரண்மனைக்குப் போய்விட்டான். பொழுது புலர்ந்தது. அக்ரகாரத்திலுள்ள அந்தணரெல்லாரும் அரண்மனை வாயிலுக்கு வந்து முறையிட வாரம்பித்துவிட்டார்கள். அரசன் விஷயமென்னவென்று வினவினன். இரவு தங்கள் வீடுகள்தோறும் கள்வன் வந்து கதவுகளைத் தட்டினதாகவும் இப்படி அநீதி தங்கள் ஆட்சியில் நடக்கலாமா வென்றும் மகாஜனங்கள் கூடினர். உடனே அரசன், நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம்; உங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டிய கள்வனைப் பிடித்துத் தருகிறேன், அவனைப் பிடித்தால் என்ன செய்யவேண்டும், என்பதை நீங்களே சொல்லுங்கள் என்றான், ஜனங்கள், மகாராஜா! எங்கள் கதவைத் தட்டிய அக்கள்வனது கரத்தை வெட்டுதல் வேண்டும் என்றனர். சரி, சேவகா எடுத்துவா வாளை யென்றான். சேவகன் வாளைக் கொண்டு வந்தான். ஜனங்களெல்லாரும் பிரமித்து நின்றனர். வாளைக்கையில் வாங்கிக்கொண்டான் அரசன். 'உங்கள் கதவுகளைத் தட்டிய கள்வன் யானே" என்று சொல்லித் தட்டிய தன் கரத்தை அறுத்துக்கொண்டான். ஜனங்கள் வரலாற்றை அறிந்து சென்றார்கள். பிறகு இவனது உண்மைக்கும் நீதிக்கும் பொது ஜனங்கள்பால் இவன் கொண்டுள்ள கருணைக்கும் வியந்து இறைவர் இவனுக்குப் பொற்கை கொடுத்தருளினரென்றும் அதுமுதல் இவன் பொற்கைப் பாண்டியன் என்ற பெயரைப் பெற்றனென்றும் தெரிகிறது. திருவிளையாடற்புராணத்தில் ஓரிடத்தில் பாண்டியனை நோக்கி "தீமை செய்தாய் போற்செங்கை குறைத்தாய்" என்று கூறியிருத்தலுங் காண்க.—"தமிழகம்"

## ஏகாலியச் சிவநேயர்களின் முறையீடு

பரம்பரையாகச் சிவபக்தி செய்துவரும் திருக்குறிப்புத் தொண்ட நாயனர் மரபினர் இருபது அன்பர்கள் கையொப்ப மிட்டு எழுதியனுப்பிய கடிதம் வருமாறு :—

திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் முதலிய கீழ் நாடுகளில் ஏகாலி (Dhobies) குலமென்றல் ரொம்பவும் இழி வாயும், அடிமைகளைப் போலவும் நினைந்து ஆலயங்களில் உள்ளே சேர்க்காமலும் "வண்ணன்" "வண்ணன்" என்று பரிகாசமாய் பேசுகிருர்கள். அப்படி வண்ணனென்றல் என்ன இழிவு. வண்ணன் இந்து மதமல்லவா. நமது "திருக்குறிப்புத் தொண்டப் பெருந்தகை யாருக்கு" சிவபெருமான் காட்சி கொடுக்கவில்லையா? ஏன் சிவ பெருமான் திருக்குறிப்புத் தொண்டர் வண்ணன்தானே என்று காட்சி கொடுக்காமல் போகவில்லை. வண்ணனை ஆலயங்களில் சேர்க்கமாட்டேனென்பது ஏன்? அப்படி வண்ணனை கோவில் களில் சேர்க்கக் கூடாது என்று நமது இந்துமத புராணங்களில் எந்த புராணத்தில் சொல்லுகிறது. உதாரணமாய் மதுரை ஜில் லாவில் மீனுக்ஷி அம்மன் கோவிலில் இன்றைக்கும் வண்ணனென் றல் சேர்ப்பதில்லை. அதினல் வண்ணர்களுக்குச் சுவாமி தரிச னம் கிடைப்பதரிது. வண்ணரும் மற்ற இந்து மதஸ்தரைப் போலவே சிவபெருமானையும், பிரணவப் பொருளாகிய கணேசப் பெருமானையும், சூரசம்மாரராகிய சிவசுப்ரமணியக் கடவுளையும், சைவ சமயம் தழைத்தோங்க அவதரித்த சமயகுரவர் நால்வரை யும், 63 நாயன்மார்களையும் தானே வணங்குகிருர்கள். அதுவும் தவிர அன்னிய மதஸ்தர்களாகிய அநேக பிரபுக்களும் கவர்ன் மெண்ட்டை சேர்ந்த துரைகளும் கோவில்களைப் பார்க்க வேண்டு மானல் தாராளமாய் உள்ளே சேர்த்துக்கொள்ளப் படுகிருர்களே; அப்படியிருக்க நமது இந்து மதத்தில் உற்பவித்த வண்ணர்கள் மாத் திரம் என்ன பாவம் செய்தார்கள். வண்ணர்கள் வெளுத்த துணிகளை சுவாமிகளுக்குச் சாத்துவதோடு அவர்களும் தரித்துக்கொள்ளு கிருர்களே. வண்ணன் வெளுத்த துணிக்கு மாத்திரம் தீட்டு கிடை யாது, வண்ணனை கோவிலில் சேர்ப்பதுமட்டும் தீட்டா? இப்படி யெல்லாம் நமது இந்து மதத்தில் ஜாதிபேத மிருக்கிறபடியால்தான் அநேகர் நாளுக்குநாள் அன்னிய மதமாகிய கிருஸ்தவ மதத்தில் சேர்ந்து கொள்ளுகிருர்கள். நமது இந்தியாவில் எவ்வளவோ கன

தனவான்களிருந்தும் மேற்படி வண்ணனென்ற ஜாதிபேதத்தை ஒழித்தாரிலர்? அப்பேர்ப்பட்ட சிவபெருமானே வண்ணாராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனருக்குக் காட்சி கொடுத்திருக்க அற்ப நரஜென்மமாகிய நாம் ஏன் வண்ணரென்றால் இழிவாய் நினைக்கவேண்டும். இப்படி வண்ணரை மிருகத்தன்மையாய் நடத்த வேண்டுமென்பது சிவபெருமான் கட்டளையோ அல்லது நமது மானிடர்களின் அகந்தையோ தெரியவில்லை. ஆனல் நீலகிரியில் அப்படி வண்ணனென்றால் இழிவு ஒன்றுமில்லை. எந்தக் கோவிலிலும் தாராளமாய் உள்ளே சேர்த்துக்கொள்ளுவார்கள். ஒரு அண்ணன் தம்பியைப்போல உறவு கொண்டாடுவார்கள். ஆனல் கீழ் நாடுகளில் தான் இப்பேர்ப்பட்ட அகந்தையான மிலேச்சத் தன்மையுண்டு. வண்ணார்கள் விபூதி தரியாமலும் விரதமிருக்காமலும் சிவபெருமானையும் கணேசப் பெருமானையும் சிவசுப்ரமணியக் கடவுளையும் 63 நாயன்மார்களையும் சமயகுரவர் நால்வரையும் உர்ச்சவம் கொண்டருளுவிக்காமலு மிருக்கிறார்களா? ஆழ்ந்து நோக்குங்கால் வண்ணரை உயர்குலமென்று கருதவேண்டும். எப்படி எனில் சிவபெருமான் திருமேனியில் எப்படி திருநீறுவெண்மையாயிருக்கிறதோ அதே வண்ணம் வண்ணன் அழுக்கடைந்த துணிகளை வெண்மை நிறமாக்குகிறான். உண்மைச் சிவபக்தர்களுக்கு அந்த வெண்மையான துணியைக் கண்டவுடன் பொன்னார் மேனியனாகிய சிவபிரான் அணிந்திருக்கும் திருநீற்றின் (விபூதியின் நிறம் தெரியும்.) ஆனல் பணச் செருக்காலும் அகந்தையாலும் அறிவீனத்தாலும் வண்ணரென்றால் இழிவாய் நினைக்கும் நண்பர்களுக்கு அது விகாரமாகவே தோன்றும். சாதாரணமாய் இவ்விடம் நமது கோடப்பமந்தில் உள்ள வண்ணார்கள் ஒவ்வொருவரும் குழந்தை முதல் பெரியவர்கள் வரையில் காலையிலும் மாலையிலும் நெற்றியில் விபூதி தரியாமலிரார்கள். ஆனல் கீழ் நாடுகளில் வண்ணரென்றால் இழிவாய்ப் பேசும் நண்பர்களில் 100-க்கு 80-பேர் தலைமயிரை கத்தரித்து (கிராப் வெட்டிகொண்டு மேல் நாட்டாளர் போலும் அன்னிய மதஸ்தினர்போலும்) நெற்றியில் நமது இந்து மதத்தின் பிரகாரம் அணிய வேண்டிய விலைமதிக்க வொண்ணாத ஆபரணமாகிய திருநீற்றை அணியாமலும் நமது பெருந்தகையாளர்களாகிய சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்களையும் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்

மலர்ந்தருளிய திருவாசகத்தையும் பாடாமலும் கண்ட கண்ட கீர்த்தனைகளையும் தெம்மாங்குகளையும் பாடுகிறார்கள். இத்தகைய நண்பர்கள் வண்ணார்களைக் கோவிலில் சேர்க்காமல் இழிவாய் பேசுவதைச் சிவபெருமான் என்றைக்கு நிவர்த்திப்பாரோ தெரியவில்லை. "குலத்துக்கீனம் கோடறி காம்பு" என்பதுபோல இந்து மதஸ்தரே இந்துக்களாகிய வண்ணாரை இழிவாய் நினைப்பது தகுதியல்ல.

---

## பிழைதிருத்தம்

7-வது மலர் 217-வது பக்கத்தில் (1866ஹூ). ருத்திரோத்காரிஹூ பங்குனிமீ 28உ என்பதை (1866ஹூ) குரோதனஹூ மார்கழிமீ 20உ என்று திருத்துக.

---

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆ முதல் 1919ஆ வரையில் வெளிவந்தவை.) காலிகோ கட்டடம் செய்தது விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | 0 | 1 | 0 |
| ஞானனந்த சம்பாஷணை | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | 0 | 1 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | 0 | 4 | 0 |

---

## பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனல் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனல் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினல் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனல் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி புதன் சனிக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங் சிங்கப்பூர் மலாகா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரேட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு ரிங்கி 5. 50 மூன்று மாதத்திற்கு ரிங்கி 3. 00. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்து ரோட்,
கோலாலம்பூர்.

---

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டியிருப்பதனாலும், இத்தமிழ்நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயாயிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபிவிருத்திக்கு இன்றியமையாத கருவியாயிருப்பதனாலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

---

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.